# Basel-Stadt மாநிலம்

Basel-Stadt பற்றிய விவரங்கள்
அரசியல் அமைப்பு
மதம்
ஓய்வு நேரம்
கலாச்சாரம்

# Basel-Stadt பற்றிய விவரங்கள்

Basel-Stadt மாநிலம் சுவிஸிலுள்ள 26 மாநிலங்களில் (உறுப்பினர் மாநிலங்கள்) ஒன்றாகும். Basel-Stadt ஜெர்மனி மற்றும் பிரான்சின் எல்லை முக்கோணத்தில் அமைந்துள்ளது. இப்பகுதி வலுவான பொருளாதாரம், பல்வேறு கலாச்சாரம் மற்றும் உயர்ந்த வாழ்க்கைத் தரம் கொண்டுள்ளது.

## எண்ணிக்கைகளும் உண்மைகளும்

Basel-Stadt மூன்று கிராம சபைகளைக் கொண்டுள்ளது: பாசில் நகர்ப்புறம் மற்றும் இரண்டு அரசியல் சமூகங்கள் (Gemeinden).ரீஹென் மற்றும் பெட்டிங்கன். இம்மாநிலத்தில்160 நாடுகளைச் சேர்ந்த சுமார் 200'000 மக்கள் வாழ்கிறார்கள். Basel-Stadt 37 கிமீ$^2$ பரப்பளவை மட்டுமே கொண்டுள்ளது. இது சுவிட்சர்லாந்தின் மிகச்சிறிய மற்றும் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலம் ஆகும். ஆட்சி மொழி டொச்.

## வரலாறு

Basel-Stadt மாநிலம் 1833 இல் நிறுவப்பட்டது. ஆனால் இது ஒரு இந்த சுவாரஸ்யமான வரலாற்றைக் கொண்டுள்ளது. மத்திய கற்காலத்திலேயே சுமார் 130,000ஆண்டுகளுக்கு முன்பே இங்கு ஒரு குடியேற்றம் இருந்திருக்கிறது. Basel மூலோபாய ரீதியாக அமைந்திருந்ததால், ரோமானியர்கள் கிமு.30க்கு முன்பு ம்யூன்ஸ்டர் மலையில் தங்கள் இராணுவத்தை நிலைநிறுத்தினர். இன்றும் அதே இடத்தில் பாசில் ம்யூன்ஸ்டர் இருக்கிறது. ம்யூன்ஸ்டர் ஒரு பிஷப் தேவாலயமாக இருந்தது மேலும் 1019இல் புனிதப்படுத்தப்பட்டது. அதனால்தான் பாசில் மாநில சின்னத்தில் ஒரு கோல் ஒன்றைக் காணலாம்: இது பிஷப்புகளின் கையில் இருக்கும் சிலுவையைக் குறிக்கிறது.
பாசில் பல்கலைக்கழகம் 1460 இல் நிறுவப்பட்டது. புத்தக அச்சடிப்பு மற்றும் மனிதநேயத்திற்கான மையமாக பாசில் வளர்ந்தது. 16ஆம் நூற்றாண்டில் நடுப்பகுதியில் வடக்கு இத்தாலி மற்றும் பிரான்சிலிருந்து தப்பி ஓடிய பல புலம்பெயர்ந்தோர் இங்கு அடைக்கலம் புகுந்தனர். அவர்கள் பட்டு நெசவு மற்றும் பட்டு சாயமிடுதல் ஆகியவற்றை பாசிலுக்கு கொண்டு வந்தனர். இதிலிருந்துதான் இன்றைய மருந்து மற்றும் ரசாயன நிறுவனங்கள் தோன்றின. 1833 இல், Basel-Stadt மற்றும் Basel-Landschaft இராணுவ மோதல்களுக்குப் பிறகு பிரிந்தன. இன்று, Basel-Stadt மாநிலம் வாழ்க்கை அறிவியலை மையமாகக் கொண்டு கலாச்சாரம், வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்திற்கான மையமாகத் திகழ்கிறது.

## சம்பிரதாயமும் பாரம்பரியமும்

Basel-Stadt மாநிலத்தில் நமக்கு மிகவும் முக்கியமான பல பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகள் உள்ளன. எங்கள் மரபுகளை நீங்கள் தெரிந்துகொள்ள விரும்புவதை நாங்கள் எதிர்நோக்குகிறோம். முதல் இடத்தில் ஃபாஸ்நாஹ்ட் (Fasnacht) உள்ளது. இது ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி அல்லது மார்ச் மாதங்களில் மூன்று நாட்கள் நடைபெறும். அதனால்தான் அவற்றை «drey scheenschte Dääg» – மூன்று சிறந்த நாட்கள் என்று அழைக்கிறோம். பாசிலர் இலையுதிர்கால கண்காட்சி (Herbstmesse) 500 ஆண்டுகளுக்கும் பழமையானது. மேலும் பாசிலர் கிறிஸ்துமஸ் சந்தையும் (Weihnachtsmarkt) ஒரு நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. பலர் ஒரு அணி, கழகம் அல்லது சமூகத்தில் உள்ளனர் கால்பந்து அணி எப் சி பாசில் கால்பந்து போட்டிகளில் பலர் கலந்து கொள்கின்றார்கள். மேலும் கோடையில் பலர் ரெயின் நதியில் நீந்துகிறார்கள்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/canton-basel-stadt/about-basel-stadt

# அரசியல் அமைப்பு

சுவிஸ் அரசியல் அதிகாரம் மூன்று நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது: மத்தியஅரசு, மாநிலம் (உறுப்பினர் மாநிலங்கள்) மற்றும் கிராமசபைகள். சுவிஸ்பிரசைகள் அரசியல் பிரச்சினைகளில் வாக்களிக்க முடியும்.

## சுவிஸ் மத்திய அரசு

சுவிஸ் கூட்டாட்சி அரசு 1848 முதல் உள்ளது. இதன் தலைநகரம் பெர்ன். சுவிட்சர்லாந்தில் ஒரே மாதிரியான இனம், மொழி அல்லது மதம் இல்லை. வெவ்வேறு கலாச்சாரங்கள் தானாக முன்வந்து ஒன்றுபட்டன. அதனால்தான் "விருப்ப தேசம்" (Willensnation) என்று அழைக்கப்படுகிறது

## கூட்டாட்சித்தத்துதுவம்

சுவிட்சர்லாந்தில் உள்ள 26 மாநிலங்கள் மற்றும் 2000றகு மேற்பட்ட கிராமசபைகள் அரசியல் ரீதியாக மிகவும் சுதந்திரமானவை, இதை ஒரு கூட்டாட்சித்தத்துவம் எனலாம். ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு கிராம சபையும் அதன் சொந்த அரசுக்கட்டமைப்பைக் கொண்டுள்ளது. Basel-Stadt மாநிலம் சொந்தமான அரசியல்அடிப்படையையும் அரசையும், ஒரு பாராளுமன்றத்தையும் ஒரு நீதிமன்றத்தையும் கொண்டிருக்கின்றது. மாநிலம் அல்லது கிராமசபையே பெரும்பாலான அரசின் நடைமுறைகளுக்குப் பொறுப்பாயுள்ளன. இதனால் உதாரணமாகப் பாடசாலை நடைமுறை மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசமான முறையில் வரையறுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் சட்டங்கள் நாடு முழுவதற்கும் செல்லுபடியாகும். தவிர மாநிலத்தால் உருவாக்கப்படும் சட்டம் அம்மாநில பிரதேசத்திற்கு மட்டுமே பொருந்தக்கூடியதாக உள்ளது. கிராம சபைகளும் தங்கள் சொந்த விதிகளை வெளியிடலாம். மத்திய அரசு, மாநிலங்கள் மற்றும் கிராம சபைகள் வரிகளை வசூலிக்கின்றன, இதனால் அவர்கள் பணிகளைச் சமாளிக்க முடியும்.

## அதிகாரப்பிரிப்பு

அரசு அதிகாரம் ஒரு சில நபருக்கு தனிநபர்கள் அல்லது அமைப்புகளில் மட்டுமே கவனம் செலுத்தக் கூடாது. அதனால் தான் சுவிட்சர்லாந்திலும் அதன் மாநிலங்களிலும் அரசு அதிகாரம் மூன்று சுதந்திர சக்திகளுக்கு இடையே பிரிக்கப்பட்டுள்ளது. சட்டமன்றம் (சட்டத்தை உருவாக்கும் அதிகாரம்), நிர்வாகிகள் (சட்டத்தை நிர்வகிக்கும் அதிகாரம்), மற்றும் நீதித்துறை (நீதித்துறை அதிகாரம்). Basel-Stadt மாநிலத்தில் பின்வரும் நிர்வாகங்கள் இந்த செயற்பாட்டை நடைமுறைப்படுத்துகின்றன:

- சட்டமன்றம்: மேல்சபை (Grosser Rat) (100 அங்கத்தவர், நான்கு வருடங்களுக்கொரு முறை மக்களால் தெரிவு செய்யப்படுவர்)
- நிர்வாகிகள்: ஆளுனர் சபை (Regierungsrat) (7 அங்கத்தவர், நான்கு வருடங்களுக்கொருமுறை மக்களால் தெரிவு செய்யப்படுவர்)
- நீதித்துறை : மாநில அளவிலான வேறுவேறு நீதிமன்றங்கள் (Gerichte).

Basel-Stadt இல் ஒரு சிறப்பு அம்சம் உள்ளது: மேல்சபை, ஆளுனர் சபை மற்றும் Basel-Stadt மாநிலத்தின் நீதிமன்றங்கள் பாசில் நகராட்சிக்கும் பொறுப்பாகும். ரீஹென் மற்றும் பெட்டிங்கன் ஆகிய இரண்டு நகராட்சிகளும் ஒரு சட்டமன்றம் (குடியிருப்போர் கவுன்சில், Einwohnerrat) மற்றும் ஒரு நிர்வாகி (நகராட்சி மன்றம், Gemeinderat) ஆகியவற்றைக் கொண்டுள்ளன.
கூட்டாட்சி மட்டத்தில் சட்டமன்றம் இரண்டு சபைகளைக் கொண்டுள்ளது: தேசிய சபை மற்றும் மாநில சபை (Nationalrat und Ständerat**)**. தேசிய அரசாங்கம் (7 உறுப்பினர்கள்) ஃபெடரல் கவுன்சில் அல்லது கூட்டாட்சி சபை (Bundesrat) என்று அழைக்கப்படுகிறது. அத்துடன் தேசியரீதியிலும் பல்வேறு நீதிமன்றங்கள் உள்ளன. மாநில நீதிமன்றங்களின் முடிவுகளை உதாரணமாக உச்ச அதிகாரமாக ஃபெடரல் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

## ஜனநாயக உரிமைகள்

சுவிஸ் மக்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கலாம். அவர்கள் கூட்டாட்சி மட்டத்திலும், அவர்கள் நகராட்சி மற்றும் அவர்களின் மாநிலத்திலும் அரசியல் அமைப்புகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். அவர்கள் தங்களை தாங்களே தேர்தலிலும் நிறுத்தலாம். தவிர அரசியல் விஷயங்களில் பொதுமக்கள் வாக்கெடுப்புகளும் உள்ளன. இங்கு குடிமக்கள் நகராட்சி, மாநிலம் மற்றும் கூட்டாட்சி மட்டத்தில் முடிவுகளை எடுக்க முடியும் (நேரடி ஜனநாயகம்). குடிமக்கள் தங்கள் சொந்த திட்டங்களையும் வாக்கெடுப்புக்கு உட்படுத்தலாம். இதை செய்ய அவர்கள் பொது வாக்கெடுப்புக்கான மனு ஒன்றை துவங்க வேண்டும். Basel-Stadt மாநிலத்தில் வசிக்கும் வெளிநாட்டினருக்கு வாக்களிக்கவும் தேர்ந்தெடுக்கவும் அனுமதி இல்லை. ஆனால் அரசியல் அக்கறை இருந்தால் அவர்கள் அதிகாரிகளிடம் மனு கொடுக்கலாம். தவிர அவர்கள் ஆணையங்கள், விருப்பக் குழுக்கள் அல்லது சங்கங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

## அடிப்படை உரிமை

கூட்டாட்சி அரசியலமைப்பு (Bundesverfassung) சுவிட்சர்லாந்தின் உச்ச சட்டக் அடிப்படை கோட்பாடுகளைக் கொண்டுள்ளது. கூட்டாட்சி அரசியலமைப்பின் ஒரு முக்கியப் பகுதியாக அடிப்படை உரிமைகள் உள்ளன. அவை ஐரோப்பிய மனித உரிமைகள் மாநாட்டில் (ஐமஉமா) எடுக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை அடிப்படையாகக் கொண்டவை. அவை மனித இருப்பைப் பாதுகாக்கின்றன, உதாரணமாக வாழ்வதற்கான உரிமை அல்லது அவசரநிலைகளில் உதவுவதற்கான உரிமை. மேலும் அவை தனி நபரை அரசு வன்முறையிலிருந்தும் அல்லது குழுக்களை பெரும்பான்மையினரிடமிருந்தும் பாதுகாக்கின்றன. அவை பிற நபரின் தோற்றம் இனம் மதம் பாலினம் அல்லது பாலியல் நோக்க நிலை ஆகியவற்றின் காரணமாக யாரும் அவர்களுக்கு எதிராக பாகுபாடு காட்ட மாட்டார்கள் என்ற உத்தரவாதம் அளிக்கும் நோக்கம் கொண்டவை. இனரீதியாக பாகுபாடு காட்டப்படும் மக்கள் Basel-Stadt மாநிலத்தில் இலவச ஆதரவையும் ஆலோசனையையும் பெறலாம். சுவிட்சர்லாந்தில் மத சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் பத்திரிகைச் சுதந்திரம் உள்ளன.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/canton-basel-stadt/political-system

# மதம்

சுவிஸ் ஒரு பாரம்பரிய கிறிஸ்தவ நாடு. ஆயினும் இன்று பல வேறு மதங்களைச் சேர்ந்த மக்களும் இங்கு வாழுகிறார்கள். மதச் சுதந்திரம் சுவிட்சர்லாந்தில் மதச் சுதந்திரம் உள்ளது மற்றும் அரசு பள்ளிகள் மத ரீதியாக நடுநிலை வகிக்கின்றன.

## மதமும் அரசும்

சுவிஸ் பாரம்பரியமான கிறிஸ்தவ நாடாகும். மதத்திற்கும் அரசுக்கும் இடையிலான உறவை மாநிலங்கள் தீர்மானிக்கின்றன. ஜெர்மன் மொழி பேசும் சுவிட்சர்லாந்தின் பகுதிகளில் உள்ள பெரும்பாலான மாநிலங்களைப் போலவே Basel-Stadt மாநிலமும் சில மத சமூகங்களைப் பொது நிறுவனங்களாக அங்கீகரிக்கிறது. இதன் பொருள் அரசு அவர்களுக்கு சில உரிமைகளை அளிக்கிறது. உதாரணமாக அவர்கள் தங்கள் உறுப்பினர்களிடமிருந்து வரி வசூலிக்கலாம். Basel-Stadt மாநிலத்தில் உள்ள பின்வரும் மத சமூகங்கள் பொதுச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளன: புராட்டஸ்டன்ட் சீர்திருத்த தேவாலயம், ரோமன் கத்தோலிக்க திருச்சபை, பழைய கத்தோலிக்க திருச்சபை மற்றும் யூத சமூகம் மற்ற சில சமூகங்கள் மாநிலத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவை தனியார் சட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## Basel-Stadt மாநிலத்தில் மத சமூகங்கள்

பாசெலின் மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் பொதுச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நான்கு சமூகங்களில் ஒன்றில் உறுப்பினராக உள்ளனர். இதைத் தவிர வேறு பல மத சமூகங்களும் உள்ளன. உதாரணமாக முஸ்லிம், இந்து, பௌத்த அல்லது புதிய இயக்கங்கள். குடிமக்களில் சுமார் பாதி பேர் எந்த மத சமூகத்தையும் சேர்ந்தவர்கள் அல்ல.

## மதச்சுதந்திரம்

சுவிசின் அரசியலமைப்பு மதச்சுதந்திரத்துக்கு உத்தரவாதமளிக்கிறது. இதன் பொருள், ஒவ்வொரு நபரும் தங்களுக்கு என்ன மத நம்பிக்கைகள் உள்ளன என்பதை அவர்களே தீர்மானிக்க முடியும். ஒவ்வொருவரும் தங்கள் நம்பிக்கைகளை வெளிப்படுத்தவும் பரப்பவும் அனுமதிக்கப்படுகிறார்கள். யாரும் யாரையும் ஒரு மத சமூகத்தில் சேரவோ அல்லது அதன் நடவடிக்கைகளில் பங்கேற்கவோ கட்டாயப்படுத்த முடியாது. மத சடங்குகள் மற்றும் கொண்டாட்டங்களைக் கடைப்பிடிக்க மக்கள் கூடுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். மக்கள் அவர்களது மதம் அல்லது நம்பிக்கை காரணமாக பாகுபாடாக நடத்தப்படக்கூடாது.

## மதமும் பாடசாலையும்.

கட்டாயப் பள்ளிக் கல்வி மத ரீதியாக நடுநிலையானது. ஆயினும், வகுப்பறையில் மத தலைப்புகளுக்கு இடம் உண்டு. ஆரம்ப பள்ளிப் கல்வி நிலையில் "இயற்கை ,மனிதன், சமூகம்" போன்ற பாடங்கள் உள்ளன. இது வெவ்வேறு வாழ்க்கை முறைகள் மற்றும் கலாச்சாரங்களைப் பற்றியது. தவிர, குழந்தைகள் தானாக முன்வந்து பங்கேற்கக்கூடிய மத போதனைகளும் உள்ளன. மேல்நிலைப் பள்ளியில் "ஒழுக்கவியல், மதங்கள், சமூகம்" என்ற பாடம் உள்ளது. இது ஒரு கட்டாயப் பாடம். இங்கு மாணவர்கள் வெவ்வேறு கலாச்சாரங்கள், மதங்கள், வாழ்க்கைத் தத்துவம் மற்றும் மதிப்புடன் வாழ்வதற்கு தேவையான ஒழுக்கம் போன்ற முக்கியமான திறன்களைக் கற்றுக் கொள்கிறார்கள். மத சமூகங்கள் சில சமயங்களில் மற்ற மதங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் பள்ளிக்கு வெளியே கற்கும் வாய்ப்புகளை வழங்குகின்றன.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/canton-basel-stadt/religion

# ஓய்வு நேரம்

Basel-Stadt இல் பல கவர்ச்சிகரமான ஓய்வு நேர நடவடிக்கைகள் உள்ளன. அதில் குறிப்பாக முக்கியமானவை கழகங்கள். இங்கே நீங்கள் புதிய நபர்களைச் சந்திக்கலாம் மற்றும் ஒன்றாக ஏதாவது செய்யலாம்.

## கழகங்கள்

பாசில் மக்கள் பலர் ஏதாவது ஒரு கழகத்தின்(Verein) உறுப்பினர்களாக உள்ளனர். விளையாட்டுக்கழகங்கள் அல்லது கலாச்சாரக்கழகங்கள் என பல்வேறு வகையான ஆர்வங்களுக்கான கழகங்கள் உள்ளன. நீங்கள் ஒரு கழகத்தில் சேர்ந்தால் மற்ற மக்களை அறிந்து கொள்ளலாம். பெரும்பாலான கழகங்கள் அனைவருக்கும் திறந்திருக்கும்.

## இளையவர்களுக்கான வசதிகள்

இளைஞர்கள் தங்கள் ஓய்வு நேர நடவடிக்கைகளுக்குப் பல சலுகைகளைப் பயன்படுத்தலாம். அங்கு அவர்கள் தங்கள் சகாக்களைச் சந்திக்கலாம். அவர்கள் அங்கு ஏதேனும் ஒரு திட்டத்தில் பங்கேற்கலாம் மற்றும் அவர்கள் சொந்த யோசனைகளைப் பரிந்துரைக்கலாம். வல்லுநர்கள் இளைஞர்களுடன் இருந்து அவர்களைக் கவனித்துக் கொள்கிறார்கள் (Jugendarbeit). பொதுவாக இந்தச் சலுகைகள் இலவசம்.

## சுற்றுலாவும் கலாச்சாரமும்.

Basel-Stadt மாநிலத்தில் நீங்கள் பல உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளலாம் மற்றும் கலாச்சார நிகழ்வுகளைப் பார்வையிடலாம். பலர் கோடையில் ரையின் நதியில் நீந்துகிறார்கள் அல்லது பூங்காவில் சுற்றுலா செல்கிறார்கள். மக்கள் குடும்பங்களாக பாசில் மிருகக்காட்சி சாலைக்குச் செல்ல விரும்புகின்றனர். இப்பகுதியில் அழகான நடைப்பயணம் மேற்கொள்ளும் மற்றும் மிதிவண்டி ஓட்டும் பாதைகள் உள்ளன. ப்ரைஸ்காவ்-இல் ஃப்ரைபுர்க் அல்லது ஸ்ட்ராஸ்புர்க் போன்ற நகரங்களை ரயிலில் விரைவாக அடையலாம். Basel Tourismus-இல் நீங்கள் எந்த உல்லாசப் பயணங்கள் செல்லலாம் மற்றும் எந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளலாம் என்பது பற்றிய தகவலைப் பெறலாம்.

## சுற்றுப்புற சந்திப்பிடங்கள்

சுற்றுப்புற சந்திப்பிடங்கள் (Quartiertreffpunkte) அனைவருக்கும் திறந்திருக்கும். இங்கு குடும்பங்கள் வயதானவர்கள் மற்றும் கொஞ்சம் மட்டுமே ஜெர்மன் பேசும் நபர்களுக்கும் வாய்ப்புகள் உள்ளன. சில சந்திப்பிடங்கள் குடும்ப மையங்களாக உள்ளன இங்கு தாய்மார்கள் மற்றும் தந்தைகள் தங்கள் குழந்தைகளுடன் ஒருவரை ஒருவர் சந்திக்கலாம். சுற்றுப்புற சந்திப்பிடங்கள் உங்களுக்கு அன்றாட வாழ்வில் தேவையான ஆலோசனைகள் மற்றும் ஆதரவை அளிக்கிறது. சுற்றுப்புற சந்திப்பிடங்களில் நீங்கள் குடும்ப கொண்டாட்டங்கள் மற்றும் பிற நிகழ்வுகளுக்கு அறைகளை வாடகைக்கு எடுக்கலாம்.

## விரும்பிவேலைசெய்தல்

விரும்பி வேலை செய்தல் அல்லது தன்னார்வத் தொண்டு (Freiwilligenarbeit) மூலம் உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் உதவுகிறீர்கள். "தன்னார்வம்" என்றால் எந்த ஒரு பணத்தையும் நீங்கள் உங்கள் வேலைக்குக் கைமாறாகப் பெற மாட்டீர்கள். சுவிட்சர்லாந்தில் தன்னார்வத் தொண்டர்கள் குறிப்பாகக் கழகங்களில் பல பணிகளை மேற்கொள்கிறார்கள். நீங்கள் தன்னார்வத் தொண்டு செய்வதில் ஆர்வமாக உள்ளீர்களா? கலாச்சாரம், விளையாட்டு, சமூகப் பிரச்சினைகள், கல்வி, விலங்குகள் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அல்லது ஆரோக்கியம் போன்ற பல பிரிவுகளுக்கு நீங்கள் கழகங்களில் ஈடுபடலாம்.
நீங்கள் தன்னார்வத் தொண்டு மற்றும் பிற பணிகள் பற்றிய தகவல்களை இங்கே காணலாம்:

- தன்னார்வப் பணிக்கான சிறப்பு அலுவலகம் GGG Benevol
- சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கம் Basel-Stadt (SRK)
- இரு பாசிலுக்குமான காரிடாஸ்

புகலிடப் பகுதி மற்றும் அகதிகளுக்கான பணிகள் பற்றிய தகவல்கள்:

- புகலிடத் துறையில் தன்னார்வப் பணிக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம்(KOFF)
- சுவிஸ் அகதிகள் உதவி

## விளையாட்டு, கலாச்சார மற்றும் கல்வி நிகழ்வுகளில் தள்ளுபடிகள்

"KulturLegi"அட்டை குறைந்த பணம் உள்ளவர்களுக்கானது. நீங்கள் KulturLegi அட்டை வைத்திருந்தால் விளையாட்டு கலாச்சாரம் மற்றும் கல்வி நிகழ்வுகளுக்கு குறைவாகவே பணம் செலுத்துவீர்கள். நீங்கள் Caritas இல் KulturLegi அட்டைக்கு விண்ணப்பிக்கலாம். Caritas நீங்கள் KulturLegi அட்டை பெற தகுதியானவர்கள் தானா என்று சரி பார்த்து உங்களுக்குத் தகவல்களை வழங்கும்.மேலும் குடும்ப அட்டை (Familienpass) மற்றும் குடும்ப அட்டை பிளூஸ் (FamilienpassPlus) ஆகியவையும் உள்ளன. இவை வடமேற்கு சுவிட்சர்லாந்தில் வசிக்கும் குடும்பங்களுக்கான அட்டைகள். குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் இளம் வயதினருக்கு "வண்ண சாவி" அல்லது விடுமுறை பாஸ் (Ferienpass) போன்ற பல தள்ளுபடிகள் மற்றும் இலவச சலுகைகள் உள்ளன. KulturLegi, குடும்ப அட்டை அல்லது வண்ண சாவி மூலம், பல மலிவான சலுகைகள் உள்ளன. இதைப் பற்றிய கூடுதல் தகவல்களை நீங்கள் இணையத்தில் காணலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/canton-basel-stadt/leisure

# கலாச்சாரம்

Basel-Stadtல் பல கலாச்சார நிகழ்வுகள் உள்ளன. உங்களிடம் அதிக பணம் இல்லையென்றால், இலவச அல்லது மலிவான சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ள பல்வேறு வழிகள் உள்ளன.

## அருங்காட்சியகங்கள் / கண்காட்சிகள்

கிட்டத்தட்ட நாற்பது அருங்காட்சியகங்கள் கண்காட்சிகள் மற்றும் நிகழ்வுகளை வழங்குகின்றன. மேலும் நீங்கள் பல சிறிய காட்சியகங்கள் மற்றும் மாற்று கலை இடங்களையும் பார்வையிடலாம். பொது இடங்களில் பல கலை படைப்புகளையும் நீங்கள் கண்டறியலாம்.

## இசை / நடனம் / நாடகம் / இலக்கியம்

Basel-Stadt மாநிலத்தில் பல கலாச்சார நிகழ்வுகள் உள்ளன. Theater Baselஇல் நீங்கள் ஓபரா, நாடகம், பாலே நடனம் மற்றும் Kaserneஇல் சமகால இசை, நடனம், தியேட்டர் ஆகியவற்றை அனுபவிக்க முடியும். Vorstadttheater அல்லது Sommercasino போன்ற சிறிய இடங்களும் உள்ளன. கோடையில் நீங்கள் பல மேடை நிகழ்ச்சிகள் மற்றும் திருவிழாக்களில் கலந்து கொள்ளலாம். சில நிகழ்வுகள் இலவசம்.

## கட்டிடக்கலை

பாசில் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நீங்கள் பல நவீன கட்டிடக்கலைகளைக் கண்டறியலாம். உதாரணமாக, ரீஹனில், கட்டிடக் கலைஞர் ரென்சோ பியானோவின் Fondation Beyeler உள்ளது. பாசிலின் மையத்தில் கிறிஸ்ட் & கேண்டன்பீன் உருவாக்கிய Kunstmuseums Basel புதிய கட்டிடம் அல்லது புதிதாக விரிவாக்கம் செய்யப்பட்ட ஹெர்சாக் & டி மியூரானின் Stadtcasinos Basel உள்ளது.

## கலாச்சார ஊக்குவிப்பு

நீங்கள் தொழிலில் ஒரு கலைஞராக இருந்தால், உங்கள் கலைதிட்டத்திற்கான நிதிக்கு விண்ணப்பிக்கலாம். கலாச்சாரத் துறையின் இணையதளத்தில் நீங்கள் எடுத்துக்காட்டாக நிதிக்கு எவ்வாறு விண்ணப்பிப்பது போன்ற தகவல்களைக் காணலாம்.

## Kostenlose und vergünstigte Angebote

பல அருங்காட்சியகங்கள் மற்றும் நிகழ்விடங்களில் சிறப்பு சலுகைகள் உள்ளன. உதாரணமாக குறிப்பிட்ட காலங்களில் நீங்கள் குறைவான பணம் செலுத்தியோ அல்லது பணம் செலுத்தாமல் இலவசமாகவோ அனுமதிக்கப்படுவீர்கள். சில குறிப்பிட்ட நபர்களுக்குச் சேர்க்கை பெரும்பாலும் மலிவாகவோ அல்லது இலவசமாகவோ இருக்கும். இது தவிர பொது இடங்களில் இலவச கண்காட்சிகள் அல்லது திறந்தவெளியில் திருவிழாக்கள் உள்ளன. இடம்பெயர்வு துறையில் உள்ள பல கழகங்கள் (Vereine) மற்றும் நிறுவனங்கள் கலாச்சார சலுகையைக் கொண்டுள்ளன. KulturLegi,, குடும்ப அட்டை (Familienpass) அல்லது colorkey மூலம், பல மலிவான சலுகைகள் உள்ளன. நீங்கள் .தனியாக அருங்காட்சியகம் அல்லது நிகழ்வுக்கு செல்ல விரும்பவில்லையா? குழுக்கள் மற்றும் கூட்டாக செல்வோருக்குப் பல்வேறு சலுகைகள் உள்ளன. "கூட்டாக" என்றால்: நீங்கள் மற்றொரு நபருடன் நிகழ்வில் கலந்து கொள்கிறீர்கள் என்று அர்த்தம்.

### மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/canton-basel-stadt/culture